## சமூகத்தை அமைத்தல்

பாதுகாப்பான, ஆரோக்கியமான, மற்றும் பலமான சமுதாயத்தை உருவாக்க நல்ல அண்டைவாசியாளர்கள் உதவுவார்கள். பலமான சமுதாயம் அண்டைவாசியாளர்களை மிகப் பாதுகாப்பாயிருப்பதாக உணர வைக்கும், தாங்கள் அதில் ஓர் அங்கம் என்று உணர வைக்கும் மற்றும் அவரது சமுதாய வளர்ச்சிக்குப் பங்கு அளிக்க அவர்களுக்கு அது உதவும். பலமான சமுதாயத்தை எப்படி உருவாக்கலாம் என்பதற்கான சில குறிப்புகள்:

- உங்களை நீங்களே அறிமுகப்படுத்திக் கொண்டு உங்களது அண்டைவாசியாளர்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்
- காலை தேனீர் போன்ற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து உங்களது அண்டைவாசியாளர்களை அழையுங்கள
- அருகிலுள்ள பூங்காவிற்கு சிற்றுண்டிப் பயணம் செல்ல ஏற்பாடு செய்யுங்கள்
- தெருவிற்கான அல்லது குடியிருப்புப் பகுதிக்கான செய்தி மடலை உருவாக்குங்கள்
- புதிய அண்டைவாசிகளை வரவேற்கவும்

இத்தகவலேட்டில் பொதுவான பாதுகாப்பு செய்திகள் அடங்கியுள்ளன.
மேலதிக சமுதாய பாதுகாப்பு மற்றும் சமூகம் அமைப்பது பற்றிய தகவல்களுக்கு,
கீழ்கண்ட இணையதளத்தை விஜயம் செய்யுங்கள் :
www.police.nsw.gov.au
www.crimeprevention.gov.au
www.holroyd.nsw.gov.au

**அவசரத்திற்கு 000வை அழையுங்கள்**
நீங்கள் தொலைபேசிப் பொறியியக்குனர் பேசுவதை கேட்கும் போது

- காவலாளர்கள், நோயாளர்களை எடுத்துச் செல்லும் வாகனம் அல்லது தீயணைப்பு வாகனத்தைக் கேட்டுப் பெறுங்கள்

**காவல் துறை உதவித் தொலைபேசி எண்**
**(PAL) 131 444**
**(PAL)**லை கீழ்கண்டவற்றில் ஏதேனும் ஒன்று நேரும்போது உபயோகிக்கவும

- ஒரு குற்றம் நடந்து கொண்டிருக்காமல் இருக்கும் பொழுது
- பேரதிர்ச்சி/காயம் யாருக்கும் ஏற்பட்டிருக்காத பொழுது
- காவலாளர்கள் ஆஜராகத் தேவையில்லாத பொழுது

**குற்றத் தடுப்பாளர்கள் 1800 333 000**
இந்த எண்ணை அழையுங்கள்:

- அநாமதேயமாகக் குற்றத்தை அறிவிக்க


ஹொல்ராய்ட் நகர சபை
**(Holroyd City Council)**
**16 Memorial Avenue**
**Merrylands NSW 2160**
தொலைபேசி எண் **: 9840 9840**
தொலைநகல் **: 9840 9734**
மின்னஞ்சல் **: web2@holroyd.nsw.gov.au**
**www.holroyd.nsw.gov.au**


இந்த விவரங்கள் www.holroyd.nsw.gov.au என்ற வலைத்தளத்தில், 'சமூகப் பாதுகாப்பு' *(Community Safety)* எனும் தலைப்பின் கீழ், கீழ்கண்ட மொழிகளில் கிடைக்கும் :
அரபு
தமிழ்
ஹிந்தி
டிங்கா
எளிமையான சீன மொழி
சம்பிரதாய சீன மொழி


தேசிய சமூகக் குற்றத் தடுப்புத் திட்டத்தின் கீழ் இந்த திட்டத்திற்கு நிதி வழங்கப்பட்டது.

NATIONAL COMMUNITY CRIME PREVENTION PROGRAMME

Australian Government


Holroyd City
*Built Around People*



# சமுதாயப் பாதுகாப்பு



## சமுதாய பாதுகாப்பு மற்றும் குற்றத்தை தடுத்தல்

குற்றம் நமது சமுதாயத்தை முழுதாகப் பாதிக்கவும் மற்றும் நமது நாள்தோறான செயல்களைக் குலைக்கவும் முடியும். இது நமக்கு சமுதாயத் தனிவினை விளைவிக்கலாம் மற்றும் நமது வாழ்க்கைப் பாங்கின் மீது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

குற்றம் ஏதும் நிகழுமோ என்ற பயம் நமது செயல்கள் மற்றும் அவை செய்யப்படும் விதம் ஆகியவற்றின் மீது எதிர்மறைத் தாக்கத்தினைத் தோற்றுவிக்கலாம். குற்றம் நிகழுமோ எனும் அச்சம் நமது சமூகத்தினையும் நமது நாளாந்திரச் செயல்களையும் கூடப் பாதிக்கிறது என்று ஆராய்ச்சி காட்டுகிறது

சமுதாயப் பாதுகாப்பு மற்றும் குற்றத் தடுப்பு ஆகியவை சேர்ந்தே காணப்படுகின்றன. நமது சமூகத்தின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் விடயங்களை நாம் அறிந்திருப்பதும், நமது உடைமைகளைப் பாதுகாக்க சிறு ஏற்பாடுகளைச் செய்வதும் வித்தியாசத்தை உண்டாக்க முடியும்.

கதவை சரியாகத் தாழ்ப்பாள் போடுவது அல்லது மண்டிய புதர்களை வெட்டுவது போன்ற சாதாரன செயல்களால் இதைச் சாதிக்க இயலும். இந்த எளிமையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் நமது பயத்தைக் குறைக்கவும், நாம் நமது சமுதாயத்தில் ஈடுபாடு கொள்ளவும், அண்டைவாசியாளர்களை அறிந்து கொள்ளவும், ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கவும் உதவுகிறது.

குற்றங்களையும் மற்றும் குற்றம் பற்றிய நமது அச்சத்தையும் குறைப்பதென்பது சமுதாயத்தில் நமது சந்தோஷத்தைக் கூட்டி நமது வாழ்க்கைத் தரத்தையும் முன்னேற்றுகிறது.



**உங்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள சில யோசனைகள்:**

## வீடு மற்றும் வாகன பாதுகாப்பு

- நல்ல தரமான பூட்டுக்களை கதவு மற்றும் ஜன்னல்களில் உபயோகியுங்கள்.
- உணரி (sensor) விளக்குகளைப் பொருத்துங்கள்.
- மோட்டார் வண்டி கொட்டகை மற்றும் கொட்டில்களை நல்ல பூட்டுக்களைக் கொண்டு பூட்டி வையுங்கள்.
- செதுக்கல் வேலை செய்பவர் ஒருவரது உதவியுடன் உங்களது உடைமைகள் மீது அடையாளக் குறிகளை இட்டு வையுங்கள்.
- வாகனத்தை நகர்த்தவியலாததாக வைத்திருக்கும் உபகரணத்தை (immobilizer) உங்கள் வண்டியில் பொருத்தி வையுங்கள்.
- குறுக்குத் தடை மற்றும் புகைப்படக் கருவிகள் போன்ற பாதுகாப்பு அம்சங்கள் கொண்ட வாகன நிறுத்துமிடங்களைப் பயன்படுத்துங்கள்.

## சொந்த பாதுகாப்பு

- பொதுப் போக்குவரத்துக்களில் மற்றவர் அருகில் அமர்ந்து பயணம் செய்யுங்கள்.
- வெளிச்சமான தெருக்கள் அல்லது மக்கள் நடமாட்டமுள்ள வழியாகச் செல்லுங்கள்.
- நீங்கள் வெளியில் செல்லும் பொழுது உங்களது பையை உங்களருகில் வைத்துக் கொள்ளுங்கள்.
- உங்களது சுற்றுப்புறத்தைப் பற்றி நன்கு அறிந்து கொள்ளுங்கள்.
- ஏடிஎம் (ATM)-ஐ யாரும் அறியாவண்ணம் உபயோகிக்கவும் மற்றும் நகரும் முன் உங்களது பணத்தை உங்கள் பையில் போட்டுக் கொள்ளுங்கள்.



## குழந்தைகள் பாதுகாப்பு

- பாதுகாப்பான கதவு மற்றும் அடுப்புக் காப்புகளை வீட்டில் உபயோகம் செய்யுங்கள்.
- உங்களது வெந்நீர் இயந்திரத்தை 50 டிகிரி செல்சியசில் நிலைக்க வையுங்கள் மற்றும் எப்பொழுதும் பயன்படுத்தும் முன் தண்ணீரைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்.
- இரவு உடுப்புகளின் மீதுள்ள குறிப்புகளில் நெருப்புக்கான எச்சரிக்கை ஏதும் இருக்கிறதா என்று பாருங்கள்.
- குழந்தைகள் தண்ணீர் அருகில் இருக்கும் பொழுது எப்பொழுதும் அவர்களைக் கண்காணியுங்கள்.
- பள்ளிகளுக்கு அருகில் வேகக் கட்டுப்பாடு மற்றும் வாகன நிறுத்தல் வரையறைகளை மதியுங்கள்.
- எப்பொழுதும் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளை அங்கீகரிக்கப்பட்ட, பொருத்தப்பட்ட குழந்தை இருக்கைகளில் உட்கார வையுங்கள்.

## இளைஞர்களின் பாதுகாப்பு

- போதை மருந்து மற்றும் மதுவகைகளை விவரம் தெரிந்த முறையில் தெரிவு செய்யுங்கள். இவற்றால் எதிர்மறை விளைவுகள் ஏற்படும் என்பதும், வெவ்வேறு விதத்தில் மக்களை இவை தாக்கும் என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.
- உங்களது சொந்த விஷயம் அல்லது உங்களது புகைப்படத்தினை இணையதளத்தில் பார்வைக்கு வைப்பின் அது உங்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடும்.
- உங்களைத் தூற்றி செல்லிடத் தொலைபேசிச் செய்திகள் வந்தால் காவல் துறையினரிடம் தெரிவியுங்கள்.
- பள்ளிகளில் தொல்லை மற்றும் தாக்குதலுக்கு ஆளாவது ஏற்றுக்கொள்ள முடியாதது. நீங்கள் தொல்லைக்காளானால் ஆசிரியர் அல்லது கல்லூரி அதிபரிடம் தெரிவியுங்கள்.

## மூத்த குடிமக்கள் பாதுகாப்பு

- எப்பொழுதும் உங்களை வந்து பார்த்திட யாரையாவது ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.
- ஏமாற்று வேலைகளைத் தவிர்க்க எப்பொழுதும் அறிமுகமற்றவரின் அடையாளத்தைத் தெரிந்துவைத்துக் கொள்ளுங்கள்.
- நீங்கள் மோட்டார் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலி அல்லது ஸ்கூட்டரை உபயோகித்தால், கொடி, ஒலி எழுப்பும் கருவி, கண்ணாடி, விளக்குகள் மற்றும் பிரதிபலிப்பான்கள் போன்றவை உள்ளனவா என்று உறுதிப்படுத்திக் கொள்ளுஙள்.
- ஒரு தனிப்பட்ட அபாய அறிவிப்புக் கருவியைக் கொண்டு செல்லுங்கள்.
- பொதுப் போக்குவரத்து சாதனத்தைப் பயன்படுத்தும் முன்னர் உங்களது பயணத்தைத் திட்டமிடுங்கள்.
- கீழே விழுவதைத் தடுக்க நீங்கள் உட்கொள்ளும் மருந்து மற்றும் உங்கள் உடல்நலத்தைப் பராமரித்து வாருங்கள்.

## வியாபாரி மற்றும் சில்லரை வியாபாரிகளின் பாதுகாப்பு

- கட்டிடத்தின் வெளியிலிருந்து பார்க்கும் பொழுது தெளிவாகப் பார்க்கக் கூடிய வகையில் செயலாற்றுங்கள்.
- அங்குமிங்கும் கிடக்கும் பொருட்களை அகற்றி வியாபார இடத்தில் அனைத்து இடங்களும் பார்வையில் படும் வண்ணம் செய்யுங்கள்.
- நல்ல தரமான பூட்டுக் கருவிகளை கதவு, ஜன்னல் மற்றும் நுழைவு வாயில்களில் பொருத்துங்கள்.
- அத்துமீறல்களை அறிவிக்கும் ஒலிப்பான்களைப் பொருத்துங்கள்.
- உள் மற்றும் வெளிப்புறங்களைக் கண்காணிக்கும் ஒளித்தோற்றக் கருவியைப் பொருத்துங்கள்
- 24-48 மணி நேரத்திற்குள் வன்மையான சுவற்றுக் கிறுக்கல்களை அழித்து அப்புறப்படுத்துங்கள்.

